நவம்பர் – 24

TNPSC துளிகள்

- கர்நாடக மாநிலம் மைசூருவில் உள்ள இந்தியாவின் முதல் LED குவிமாடம் கொண்ட கோளரங்கமான காஸ்மோஸ்-மைசூரு (COSMOS-Mysuru) கோளரங்கத்தை இந்தியப் பிரதமர் திறந்து வைத்தார்.
- தகவல் தொடர்பு அமைச்சகத்தின் கீழ் உள்ள தொலைத்தொடர்புத் துறை (DoT), புது தில்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் அலுவல் மொழி குறித்த முதலாவது அகில இந்திய மாநாடு 2026-ஐ நடத்தியது.
  - அரசு நிர்வாகம் மற்றும் அதிகாரப்பூர்வத் தகவல்தொடர்புகளில் இந்தி (ராஜ்பாஷா) மொழியின் படிப்படியான பயன்பாட்டை ஊக்குவிப்பதே இம்மாநாட்டின் நோக்கம் ஆகும்.
- உச்ச நீதிமன்றத்தின் வழிகாட்டுதலைத் தொடர்ந்து, 2026 ஆம் ஆண்டு டிசம்பர் 15 முதல் அமலுக்கு வரும் வகையில், தனியார் கார்கள் மற்றும் இருசக்கர வாகனங்களுக்கான நான்கு அடுக்கு மோட்டார் காப்பீட்டுக் கட்டமைப்பை இந்தியக் காப்பீட்டு ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையம் (IRDAI) அறிமுகப்படுத்தியுள்ளது.
  - மூன்றாம் தரப்புப் பொறுப்பு, பயணிகள் அல்லது பின்னால் அமர்ந்து செல்பவர்களுக்கான சட்டப்பூர்வப் பொறுப்பு, தனிநபர் விபத்துக் காப்பீடு மற்றும் சொந்த வாகனச் சேதக் காப்பீடு ஆகியவை இந்த நான்கு கூறுகளாகும்.
- இந்தியா முழுவதும் தொலைத்தொடர்பு வலையமைப்பின் செயல்பாட்டைக் கண்காணிக்கவும் காட்சிப்படுத்தவும் 'நெட்வொர்க் அனுபவ்' (Network Anubhav) தளத்தை இந்தியத் தொலைத்தொடர்பு ஒழுங்குமுறை ஆணையம் (TRAI) அறிமுகப்படுத்தியுள்ளது.
- "மத்திய அமைச்சகங்கள்/துறைகளால் அதிகபட்ச கட்டிடங்களில் சூரிய ஒளி மின்சக்தி அமைக்கப்பட்டதற்கான" பிரிவில் முதலிடம் பிடித்ததற்காக, புது தில்லியில் குடியரசுத் துணைத் தலைவர் சி. பி. ராதாகிருஷ்ணனிடமிருந்து ரயில்வே அமைச்சகம் 'PM சூர்ய கர் சிறப்பு விருது 2026'-ஐப் பெற்றது.
  - 2024 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தொடங்கப்பட்ட 'PM சூர்ய கர்: முஃப்த் பிஜ்லி யோஜனா' திட்டம், ஒரு கோடி வீடுகளில் மேற்கூரை சூரிய ஒளி மின்சக்தி அமைப்புகளை நிறுவுவதையும், தகுதியான வீடுகளுக்கு மாதந்தோறும் 300 யூனிட்கள் வரை இலவச மின்சாரம் வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- பாதுகாப்பான சுகாதாரத்தின் முக்கியத்துவம் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அனைவருக்கும் கழிப்பறை வசதியை ஊக்குவிக்கவும், சுகாதாரம், பொதுச் சுகாதாரம் மற்றும் பாலினச் சமத்துவம் ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை எடுத்துரைக்கவும் ஆண்டுதோறும் நவம்பர் 19 அன்று உலகக் கழிப்பறை தினம் அனுசரிக்கப்படுகிறது.
  - 2026 ஆம் ஆண்டிற்கான இதன் கருத்துரு Safe toilets. Equal futures என்பதாகும்.
- உலகெங்கிலும் உள்ள பெண் தொழில்முனைவோரைக் கொண்டாடவும், ஆதரிக்கவும் மற்றும் அதிகாரமளிக்கவும் ஆண்டுதோறும் நவம்பர் 19 அன்று மகளிர் தொழில் முனைவோர் தினம் அனுசரிக்கப் படுகிறது.

தமிழ்நாட்டுச் செய்திகள்

சூரிய ஒளி மின்சக்தி நிறுவல் மந்தநிலை

- அனுமதி தாமதங்கள், அதிகரித்து வரும் செலவுகள் மற்றும் கொள்கை தொடர்பான சிக்கல்கள் காரணமாக 2027 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் புதிய சூரிய ஒளி மின்சக்தி நிறுவல்களில் மந்தநிலை ஏற்படக் கூடும்.

- தமிழ்நாடு சுமார் 10,000–11,000 மெகாவாட் (MW) நிறுவப்பட்ட சூரிய ஒளி மின்சக்தித் திறனைக் கொண்டுள்ளது.



- திட்ட அனுமதிகளில் ஏற்படும் தாமதங்கள், அதிகரித்து வரும் செலவுகள் மற்றும் 2027 ஆம் ஆண்டு ஏப்ரல் முதல் மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பை (BESS) கட்டாயமாக இணைத்தல் ஆகியவை புதிய நிறுவல்களை மந்தப்படுத்தக்கூடும்.
- மின் கடத்தல் கட்டணங்கள் மற்றும் சேமிக்கப்பட்ட மின்சாரத்தை விற்பனை செய்வதற்கான விதிகள் உள்ளிட்ட மாநிலத்தின் BESS கொள்கையின் விதிகளைத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் (TNERC) தெளிவுபடுத்த வேண்டியுள்ளது.
- மாநிலத்தின் பசுமை ஆற்றல் திறந்தவெளி அணுகல் கொள்கைக்கு நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்த போதிலும், சில சூரிய ஒளி மின் உற்பத்தியாளர்களுக்கு 8% வங்கிக் கட்டணம் கோரி நோட்டீஸ் அனுப்பப் பட்டுள்ளது.
- ஒப்புதல்களைப் பெறுவதற்கான ஒற்றைச் சாளர முறை திறம்பட செயல்படவில்லை, சமீபத்தில் அறிவிக்கப்பட்ட மின்கல ஆற்றல் சேமிப்பு அமைப்பு (BESS) கொள்கையின் அடிப்படையிலான நுணுக்கமான விவரங்களை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவிக்க வேண்டும், மேலும் செலவுகள் அதிகரித்து வருகின்றன.
- அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல், அனைத்து புதிய திட்டங்களிலும் BESS இருப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது, இது செலவுகளை மேலும் அதிகரிக்கும்.
- அந்நிய நேரடி முதலீடுகளின் ஒரு பகுதியாக வரும் சூரிய ஆற்றல் திட்டங்களுக்கு ஒற்றைச் சாளர ஒப்புதல் முறை திறம்பட செயல்படுகிறது.
- மற்ற திட்டங்களுக்கு, கிராமப்புற உள்ளாட்சித் தலைவர்களிடமிருந்து தொடங்கி பல ஒப்புதல்கள் தேவைப்படுகின்றன.
- இவை தாமதங்களுக்கு வழி வகுத்து, செலவுகளை அதிகரிக்கின்றன.
- BESS கொள்கை ஒரு வரவேற்கத்தக்க நடவடிக்கையாக இருந்தாலும், சேமிக்கப்பட்ட சூரிய ஆற்றல் 24 மணி நேரத்திற்குள் வெளியேற்றப்படுவதை தமிழ்நாடு பசுமை ஆற்றல் கழகம் உறுதி செய்ய வேண்டும், அப்போதுதான் மின்னாக்கி அடுத்த நாள் புதிதாக உற்பத்தி செய்யப் பட்ட ஆற்றலைச் சேமிக்க முடியும்.
- மேலும் துணை மின் நிலையங்கள் அமைப்பது மற்றும் பல்வேறு அரசுத் துறைகளுக்குச் சொந்தமான நிலங்களில் மின் இணைப்புகள் அமைப்பதற்கான வழி உரிமைச் சவால்களுக்குத் தீர்வுகள் காண்பது போன்றவை, முதலீட்டாளர்கள் எதிர்

கொள்ளும் மற்ற சிக்கல்களில் அடங்கும், இவை சூரிய ஆற்றல் திட்டங்களின் வேகத்தைக் குறைக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன.

தேசியச் செய்திகள்

இந்தியாவின் உள்கட்டமைப்பு உற்பத்தி வளர்ச்சி

- 2026 ஆம் ஆண்டு அக்டோபரில் இந்தியாவின் ஒன்பது முக்கியத் தொழில்கள் 10.9% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன, இது கடந்த 31 மாதங்களில் இல்லாத அதிகபட்ச வளர்ச்சியாகும்.
- நிலக்கரி, கச்சா எண்ணெய், இயற்கை எரிவாயு, பெட்ரோலிய சுத்திகரிப்புப் பொருட்கள், உரங்கள், எஃகு, சிமெண்ட், மின்சாரம் மற்றும் இரும்புத் தாது ஆகியவை இந்த ஒன்பது முக்கியத் தொழில்களாகும்.
- இரும்புத் தாது அதிகபட்சமாக 26.4% வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளது; அதைத் தொடர்ந்து நிலக்கரி (23.1%), மின்சாரம் (21.6%) மற்றும் சிமெண்ட் (15.4%) ஆகியவை உள்ளன.
- ஆறு துறைகள் வளர்ச்சியைப் பதிவு செய்துள்ள நிலையில், உரங்கள், இயற்கை எரிவாயு மற்றும் கச்சா எண்ணெய் ஆகியவை சரிவைச் சந்தித்துள்ளன.
- தொழில்துறை உற்பத்திக் குறியீட்டில் (IIP) இந்த ஒன்பது தொழில்களும் சுமார் 40% பங்களிப்பைக் கொண்டுள்ளன.
- திருத்தப்பட்ட முக்கியத் தொழில்களின் குறியீடு (ICI), 2011–12 ஆம் ஆண்டிற்குப் பதிலாக 2022–23 ஆம் ஆண்டை அடிப்படை ஆண்டாகப் பயன்படுத்துகிறது, மேலும் இரும்புத் தாதுவை ஒன்பதாவது துறையாக உள்ளடக்கியுள்ளது.



தேசிய HPV தடுப்பூசி பிரச்சாரம்

- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரியில் தேசிய HPV தடுப்பூசிப் பிரச்சாரம் தொடங்கப்பட்ட ஒன்பது மாதங்களுக்குள், 2026 ஆம் ஆண்டு நவம்பர் 21 வரை இந்தியா 1 கோடிக்கும் (10 மில்லியன்) அதிகமான HPV தடுப்பூசி டோஸ்களைச் செலுத்தியுள்ளது.
- 2026 ஆம் ஆண்டு பிப்ரவரியில் பிரதமர் நரேந்திர மோடியால் தொடங்கப்பட்ட இந்தப் பிரச்சாரம், பெற்றோரின் சம்மதத்துடன் 14 வயதுடைய சிறுமிகளுக்கு இலவச, தன்னார்வ, ஒற்றை டோஸ் தடுப்பூசியை வழங்குகிறது.

- அதிக ஆபத்துள்ள மனித பாப்பிலோமா வைரஸ் (HPV) வகைகளின் தொடர்ச்சியான தொற்றால் ஏற்படும் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுப்பதை இந்தப் பிரச்சாரம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- குஜராத், உத்தரப் பிரதேசம், ஆந்திரப் பிரதேசம், மிசோரம், மத்தியப் பிரதேசம் மற்றும் பீகார் ஆகிய மாநிலங்கள் தாங்கள் அடையாளம் கண்ட இலக்கு மக்கள் தொகையில் 100% சாதனையை எட்டியுள்ளன.
- U-WIN (உலகளாவிய தடுப்பூசித் திட்டம் – WIN) டிஜிட்டல் தளம் பயனாளிகளைக் கண்காணித்தல், நிகழ்நேரக் கண்காணிப்பு, முன்பதிவு செய்தல் மற்றும் டிஜிட்டல் தடுப்பூசி சான்றிதழ்களை வழங்குதல் ஆகியவற்றிற்கு உதவுகிறது.
- உயிரித் தொழில்நுட்பத் துறை (DBT) மற்றும் உயிரித் தொழில்நுட்பத் தொழில் ஆராய்ச்சி உதவி சபை (BIRAC) ஆகியவற்றின் ஆதரவுடன் இந்திய சீரம் நிறுவனத்தால் (Serum Institute of India) உருவாக்கப்பட்ட செர்வாவாக் (CERVAVAC), வகை 6, 11, 16 மற்றும் 18 ஆகியவற்றை இலக்காகக் கொண்ட இந்தியாவின் நான்கு இணைதிறன் கொண்ட (Quadrivalent) HPV தடுப்பூசியாகும்.

India has administered over one crore HPV vaccine doses in less than nine months under its National HPV Vaccination Campaign, achieving nearly 87% coverage of the identified target population. Launched by PM Modi in February 2026, the campaign provides free, voluntary single-dose HPV vaccination to 14-year-old girls at government health facilities.

இந்தியாவின் சமூக விதை வங்கிகள்



- புது தில்லியில் நடைபெற்ற தேசியக் கருத்தரங்கில், 652 சமூக விதை வங்கிகளை (CSBs) வரைபடமாக்கும் டிஜிட்டல் அட்லஸ்/நிலப்படத் தொகுப்பு மற்றும் திறன் மேம்பாட்டுக் கையேட்டை டைவர்சிஃபார்ம்-இந்தியா (DIVERSIFARM-India) வெளியிட்டது.
- சமூக விதை வங்கிகள் (CSBs) என்பவை விவசாயிகளிடையே பாரம்பரிய மற்றும்

உள்ளூர் சூழலுக்கு ஏற்ற விதைகளைச் சேகரித்து, பாதுகாத்து, சேமித்து, பெருக்கி, விநியோகிக்கும் சமூகத்தால் நிர்வகிக்கப்படும் நிறுவனங்களாகும்; இவை வேளாண் பல்லுயிர்தன்மைப் பெருக்கத்தைப் பாதுகாத்து விதை இருப்பை உறுதி செய்கின்றன.

- இந்தியாவில் குறைந்தது 1,000 சமூக விதை வங்கிகள் இருப்பதாக இந்த ஆய்வு மதிப்பிடுகிறது; இவை பாரம்பரிய விதைகளைப் பாதுகாக்கவும் விவசாயிகளின் மீள்தன்மையை வலுப்படுத்தவும் உதவுகின்றன.
- டைவர்சிஃபார்ம்-இந்தியா என்பது நார்வேயின் ஃபிரிட்ஜோஃப் நான்சன் நிறுவனம் (FNI) மற்றும் எம்.எஸ். சுவாமிநாதன் ஆராய்ச்சி அறக்கட்டளை (MSSRF) ஆகியவற்றால் வழி நடத்தப் படும் மூன்றாண்டுத் திட்டமாகும்.
- இந்த ஆய்வு மேலாண்மைக் கட்டமைப்புகளின் அடிப்படையில் ஆறு வகையான சமூக விதை வங்கிகளை அடையாளம் கண்டுள்ளதுடன், ஒடிசாவில் அவற்றை மிகவும் நன்கு வலுப்படுத்துவதற்கான 10 அம்ச செயல்திட்டத்தையும் தயாரித்துள்ளது.
- சமூக விதை வங்கிகளை ஆதரிப்பதற்கான முக்கிய சட்டக் கட்டமைப்புகளாகப் பயிர் ரகங்கள் மற்றும் விவசாயிகள் உரிமைகள் பாதுகாப்புச் சட்டம், 2001 மற்றும் உயிரியல் பன்முகத்தன்மைச் சட்டம், 2002 ஆகியவற்றை இத்திட்டம் ஆய்வு செய்துள்ளது.

சர்வதேசச் செய்திகள்

இந்தியா-ஜப்பான் உத்திசார் கூட்டாண்மை



- 2027 ஆம் ஆண்டில் இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரக உறவுகளின் 75-வது ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையிலும், 'இந்தியா-ஜப்பான் பகிரப்பட்ட எல்லைகளின் ஆண்டாகக்' கொண்டாடும் வகையிலும், 2026 ஆம் ஆண்டு நவம்பர் 19 அன்று இந்தியா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகள் "பகிரப்பட்ட எல்லைகள்" என்ற வாசகத்துடன் கூடிய கூட்டு நினைவு இலச்சினையை வெளியிட்டன.
- அமைதி ஒப்பந்தம் நடைமுறைக்கு வந்ததைத் தொடர்ந்து, 1952 ஆம் ஆண்டு ஏப்ரல் 28 அன்று இந்தியாவும் ஜப்பானும் தூதரக உறவுகளை நிறுவின.
- இந்த இலச்சினையில் 7 என்ற எண்ணில் இந்திய அலங்கார வடிவங்களும், 5 என்ற எண்ணில் ஜப்பானின் உதயசூரியன் மற்றும் செய்கைஹா (Seigaiha) அலைகளும், சூரியனைச் சுடராகக் கொண்ட அகல் விளக்கும், பகிரப்பட்ட எல்லையைக் குறிக்கும் இரண்டு அசையும் ரிப்பன்களும், இந்தியாவைப் பிரதிநிதித்துவப்படுத்தும்

தாமரையும் இடம் பெற்றுள்ளன.

- Business Connect-75 இந்திய வணிகத் தொகுப்புகளுக்கும் ஜப்பானிய பிராந்திய வங்கிகள் மற்றும் நிறுவனங்களுக்கும் இடையிலான வணிகத் தொடர்புகளை வலுப்படுத்தும்.
- MIRAI-VIGYAN-75 LUPEX (நிலவின் துருவப் பகுதி ஆய்வு) திட்டம் உள்ளிட்ட அறிவியல், தொழில்நுட்பம் மற்றும் புத்தாக்கத் துறைகளில் ஒத்துழைப்பை ஊக்குவிக்கும்.
- Empower Regional Linkage-75 ஆனது இந்திய மாநிலங்களுக்கும் ஜப்பானிய மாகாணங்களுக்கும் இடையிலான கூட்டாண்மையை வலுப்படுத்தும்.

இந்தியா-போர்ச்சுகல் உத்திசார் கூட்டாண்மை

- 2026 ஆம் ஆண்டு நவம்பர் 20 அன்று புது தில்லியில் நடைபெற்ற 6-வது இந்தியா-போர்ச்சுகல் வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் போது இரு நாடுகளும் தங்களது இருதரப்பு உறவுகளை மறுஆய்வு செய்ததுடன், 2027–2032 ஆம் ஆண்டிற்கான ஐந்தாண்டுச் செயல்திட்டத்தை இறுதி செய்ய ஒப்புக் கொண்டன.
- வர்த்தகம், முதலீடு, பாதுகாப்பு, புதுப்பிக்கத்தக்க ஆற்றல், விவசாயம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், டிஜிட்டல் தொழில்நுட்பங்கள், கல்வி மற்றும் சுற்றுலா ஆகிய துறைகளில் ஒத்துழைப்பு குறித்து இரு நாடுகளும் விவாதித்தன.
- நிலுவையில் உள்ள இருதரப்பு ஒப்பந்தங்கள் குறித்த பேச்சுவார்த்தைகளை விரைவுபடுத்தவும், அவற்றை விரைவில் கையெழுத்திடவும் இரு நாடுகளும் ஒப்புக் கொண்டன.
- இந்தியா-ஐரோப்பிய ஒன்றிய (EU) தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் (FTA) குறித்த பேச்சுவார்த்தைகள் நிறைவடைந்ததை இரு தரப்பினரும் வரவேற்றனர்.
- இந்தோ-பசிபிக் மற்றும் மேற்கு ஆசியப் பகுதிகளின் நிலவரங்கள் குறித்துக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டதுடன், ஐக்கிய நாடுகள் சபை உள்ளிட்ட பலதரப்பு மன்றங்களில் ஒத்துழைப்பைத் தொடரவும் ஒப்புக் கொண்டன.



உலக சுகாதார அமைப்பின் (WHO) நீரிழிவு நோய் வழிகாட்டுதல்கள் 2026

- உலக நீரிழிவு நோய் விழிப்புணர்வு தினத்தை முன்னிட்டு, 2026 ஆம் ஆண்டு நவம்பர் 14 அன்று பெரியவர்களுக்கான வகை 1 (Type 1) நீரிழிவு நோயைக் கண்டறிதல் மற்றும் நிர்வகிப்பதற்கான தனது முதலாவது வழிகாட்டுதல்களை உலக சுகாதார அமைப்பு (WHO) வெளியிட்டது.
- வகை 1 நீரிழிவு நோய் என்பது கணையம் மிகக் குறைந்த அளவு இன்சுலினை உற்பத்தி

செய்யும் அல்லது சுத்தமாக உற்பத்தி செய்யாத ஒரு வாழ்நாள் நோயாகும்; இதனால் நோயாளிகள் உயிர்வாழ்வதற்குத் தினசரி இன்சுலின் சிகிச்சையைச் சார்ந்திருக்க வேண்டிய நிலை ஏற்படுகிறது.

- 2025 ஆம் ஆண்டில் உலகளவில் சுமார் 9.5 மில்லியன் மக்கள் வகை 1 நீரிழிவு நோயுடன் வாழ்ந்து வந்தனர் மேலும் அந்த ஆண்டில் 5,00,000 புதிய பாதிப்புகள் கண்டறியப் பட்டன.
- தினசரி பலமுறை இன்சுலின் ஊசி போட்டுக்கொள்வதையும், இரத்தப் பரிசோதனைகள், விரல் நுனிப் பரிசோதனைகள் அல்லது தொடர் குளுக்கோஸ் கண்காணிப்பு (CGM) சாதனங்கள் மூலம் இரத்தச் சர்க்கரை அளவைத் தொடர்ந்து கண்காணிப்பதையும் உலக சுகாதார அமைப்பு பரிந்துரைக்கிறது.
- 2030 ஆம் ஆண்டிற்குள் வகை 1 நீரிழிவு நோயால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் மலிவு விலையில் இன்சுலின் சிகிச்சை மற்றும் இரத்தச் சர்க்கரை சுய-கண்காணிப்பு வசதி கிடைப்பதை உறுதி செய்ய உலக சுகாதார அமைப்பு இலக்கு நிர்ணயித்துள்ளது.



ஆஸ்திரேலியாவின் நிலக்கரி ஏற்றுமதி



- ஆஸ்திரேலியா பல பத்தாண்டுகளுக்கு அதிக அளவில் புதைபடிவ எரிபொருட்களை ஏற்றுமதி செய்வதைத் தொடரும் என்று கணிக்கப்பட்டுள்ளது என்பதோடு 2030 ஆம் ஆண்டு வரை நிலக்கரி ஏற்றுமதி ஆண்டுக்கு சுமார் 350 மில்லியன் டன்களாக (Mt) இருக்கும்.

- ஆஸ்திரேலியா உலகின் இரண்டாவது பெரிய நிலக்கரி ஏற்றுமதியாளராகும்.
- மேலும், ஆஸ்திரேலியா உலகின் மூன்றாவது பெரிய LNG ஏற்றுமதியாளராகவும் உள்ளது.
- ஆஸ்திரேலியா 2025 ஆம் ஆண்டில் 352 மில்லியன் டன்கள் கறுப்பு நிலக்கரியை ஏற்றுமதி செய்ததுடன், இது உலகளாவிய ஏற்றுமதியில் 25 சதவீதமாகும்.
- அதன் உள்நாட்டு பசுமை இல்ல வாயு வெளியேற்றம் உலகளாவிய மொத்தத்தில் 1 சதவீதத்திற்கும் சற்று அதிகமாக உள்ளது.
- துருக்கியின் அன்டால்யாவில் நடைபெறும் COP31 மாநாட்டில் ஆஸ்திரேலியா பேச்சு வார்த்தைகளுக்குத் தலைமை தாங்குகிறது.
- துருக்கி COP மாநாட்டின் தலைமைப் பதவியை வகிக்கிறது, அதே நேரத்தில் ஆஸ்திரேலியா பேச்சுவார்த்தைகளின் தலைவராகப் பணியாற்றுகிறது.
- COP31 மாநாட்டில் துருக்கியால் தொடங்கப்பட்ட '35க்கு 35 உலகளாவிய மின் மயமாக்கல் உறுதிமொழி', 2035ஆம் ஆண்டுக்குள் உலகளாவிய இறுதி ஆற்றல் நுகர்வில் மின்சாரத்தின் பங்கை 35 சதவீதமாக அதிகரிப்பதை ஒரு நோக்கமாகக் கொண்டுள்ளது.

தட்டம்மை இல்லாத நிலை



- அதிக அளவிலான பாதிப்புகளுக்கு மத்தியில், 26 ஆண்டுகளுக்குப் பிறகு அமெரிக்கா தட்டம்மை ஒழிப்பு நிலையை இழந்துள்ளது.
- உலக சுகாதார அமைப்பின் ஒரு அங்கமான பான் அமெரிக்க சுகாதார அமைப்பு (PAHO), அமெரிக்காவின் தட்டம்மை ஒழிப்பு நிலையை ரத்து செய்தது.
- 2025-ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கனடா தனது நிலையை இழந்ததைத் தொடர்ந்து, அதே நாளில் மெக்சிகோ மற்றும் பொலிவியாவுக்கான தட்டம்மை ஒழிப்பு நிலையையும் PAHO ரத்து செய்தது.

- உலகளவில் பதிவான தட்டம்மை பாதிப்புகளின் எண்ணிக்கையில் இந்தியா முன்னணி நாடுகளில் ஒன்றாக உள்ளது (வங்காளதேசம் மற்றும் இந்தோனேசியா போன்ற நாடுகளுக்குப் பின்னால் தரவரிசையில் உள்ளது).
- உலக சுகாதார அமைப்பின் (WHO) வரையறையின்படி, தட்டம்மை என்பது மிகவும் எளிதில் பரவக்கூடிய ஒரு வைரஸ் நோயாகும், இது பெரும்பாலும் குழந்தைகளையே பாதிக்கிறது.
- பாதிக்கப்பட்ட நபர்களின் மூக்கு, வாய் அல்லது தொண்டையிலிருந்து வெளிப்படும் நீர்த்துளிகள் மூலம் இது பரவுகிறது.
- தட்டம்மை உலகின் மிகவும் எளிதில் பரவக்கூடிய வைரஸ்களில் ஒன்றாகும்.
- பாதிக்கப்பட்ட ஒரு நபர், தடுப்பூசி போடப்படாத 12 முதல் 18 பேருக்கு இதனைப் பரப்ப முடியும்.
- உலக சுகாதார அமைப்பின்படி, தட்டம்மையைத் தடுக்க சமூகம் தழுவிய தடுப்பூசி போடுவதே மிகவும் பயனுள்ள வழியாகும்.
- அனைத்து குழந்தைகளுக்கும் தட்டம்மை தடுப்பூசி போடப்பட வேண்டும்.

பொருளாதாரச் செய்திகள்

இந்தியாவின் மின்னணுப் பொருட்களின் ஏற்றுமதி



- 2026-27 ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-செப்டம்பர் மாதங்களில் இந்தியாவின் மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதி 44 சதவீதம் அதிகரித்து 31.97 பில்லியன் அமெரிக்க டாலராக உயர்ந்துள்ளது.
- இது முந்தைய நிதியாண்டின் இதே காலகட்டத்தில் 22.20 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்தது.
- இந்தியாவின் மின்னணு ஏற்றுமதியில் திறன்பேசிகள் தொடர்ந்து மிகப்பெரிய அங்கமாக இருந்தாலும், திறன்பேசி அல்லாத மின்னணுப் பொருட்கள் வேகமான வளர்ச்சியைப் பதிவு செய்துள்ளன.
- திறன்பேசி ஏற்றுமதி 35.8 சதவீதம் உயர்ந்து, 2025-26 ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-

செப்டம்பர் மாதங்களில் 13.38 பில்லியன் அமெரிக்க டாலராக இருந்த ஏற்றுமதி, 2026-27 ஆம் நிதியாண்டின் முதல் பாதியில் 18.17 பில்லியன் அமெரிக்க டாலராக அதிகரித்து உள்ளது.

- இருப்பினும், மற்ற மின்னணுப் பிரிவுகள் வேகமாக விரிவடைந்ததால், மொத்த மின்னணுப் பொருட்கள் ஏற்றுமதியில் அவற்றின் பங்கு 60.3 சதவீதத்திலிருந்து 56.8 சதவீதமாகக் குறைந்துள்ளது.
- உதிரிபாகங்கள், அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகைகள், தகவல் தொடர்பு சாதனங்கள், நினைவகப் பொருட்கள் மற்றும் சேமிப்பு சாதனங்கள் என ஏற்றுமதிகள் படிப்படியாகப் பல்வகைப்படுத்தப்படுவதை இது சுட்டிக் காட்டுகிறது.
- உதிரிபாகங்கள் மற்றும் துணைப் பொருட்களின் ஏற்றுமதியில் சிங்கப்பூர் 1.87 பில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன் முன்னணி இடமாக இருந்தது, அதைத் தொடர்ந்து சீனா 111.5 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்புடன் இரண்டாம் இடத்தில் உள்ளது.
- இந்தியாவின் மின்னணு வர்த்தகம் திறன்பேசிகளுக்கு அப்பால் விரிவடைந்து வருவதையும், உதிரிபாகங்கள், அச்சிடப்பட்ட மின்சுற்றுப் பலகைகள், தகவல் தொடர்பு சாதனங்கள், நினைவக ஒருங்கிணைந்த சுற்றுகள் மற்றும் சேமிப்பு சாதனங்கள் ஆகியவை ஒட்டு மொத்த வளர்ச்சிக்கு அதிகளவில் பங்களிப்பதையும் இந்த ஏற்றுமதி புள்ளிவிவரங்கள் காட்டுகின்றன.
- திறன்பேசிகள் மிகப்பெரிய ஏற்றுமதிப் பிரிவாக இருந்தபோதிலும், திறன்பேசி அல்லாத மின்னணுப் பொருட்களின் வேகமான விரிவாக்கம், 2026-27 ஆம் நிதியாண்டின் ஏப்ரல்-செப்டம்பர் காலக் கட்டத்தில் மொத்த ஏற்றுமதியில் அவற்றின் பங்கை 43.2 சதவீதமாக உயர்த்தியது.
- இந்தத் தயாரிப்புப் பிரிவுகளில் ஏற்றுமதிகள் அதிகரித்திருப்பதும், சிங்கப்பூர், சீனா, ஹாங்காங் மற்றும் மலேசியா போன்ற சந்தைகளுக்கு ஏற்றுமதிகள் வளர்ந்து வருவதும், இந்தியாவின் ஏற்றுமதி செயல்திறனுக்குப் பரந்த அளவிலான மின்னணுப் பொருட்கள் பங்களிப்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

ஹெரா சிறுகோள் திட்டம்



- நாசாவின் இரட்டைச் சிறுகோள் திசைதிருப்பல் சோதனையின் (DART) மோதல்

இடத்தை ஆய்வு செய்வதற்காக, ஐரோப்பிய விண்வெளி முகமையின் (ESA) ஹெரா (Hera) விண்கலம் 2026 ஆம் ஆண்டு நவம்பர் மாதத்தில் டிடிமோஸ் (Didymos) இரட்டைச் சிறுகோள் அமைப்பைச் சென்றடைந்தது.

- 2022 ஆம் ஆண்டு செப்டம்பர் 26 அன்று நாசாவின் DART விண்கலத்தால் மோதப்பட்ட சிறிய சிறுகோளான டிமார்போஸை (Dimorphos) ஹெரா ஆய்வு செய்யும்.
- DART திட்டமானது டிடிமோஸைச் சுற்றியுள்ள டிமார்போஸின் சுற்றுப்பாதையை 33 நிமிடங்கள் மாற்றியமைத்து, சிறுகோளைத் திசைதிருப்பும் இயக்க ஆற்றல் மோதல் (Kinetic-impact) முறையை நிரூபித்தது.
- டிமார்போஸின் நிறையை அளவிடுதல், அதன் மேற்பரப்பை வரைபடமாக்குதல் மற்றும் அதன் உள் கட்டமைப்பை ஆய்வு செய்தல் ஆகியவற்றை ஹெரா மேற்கொள்ளும்.
- மேற்பரப்புக் கட்டமைப்பு மற்றும் உள் கட்டமைப்பை ஆய்வு செய்வதற்காக இத்திட்டம் மிலானி (Milani) மற்றும் ஜுவென்டாஸ் (Juventas) ஆகிய இரண்டு கியூப்சாட்களைப் (CubeSats) பயன்படுத்துகிறது.

சுற்றுச்சூழல் செய்திகள்

COP31 மாசுபாடு கூட்டணி



- COP31 மாநாட்டின் போது மெக்சிகோ, பனாமா மற்றும் கம்போடியா ஆகிய நாடுகள் கருப்பு கார்பன் குறித்த துறைசார் நடவடிக்கைக்கான சக நாடுகள் வலையமைப்பில் (Peer Network on Sectoral Action on Black Carbon) இணைந்தன.
- ஏற்கனவே உள்ள ஒன்பது உறுப்பு நாடுகளுடன் இந்த மூன்று நாடுகளும் இணைந்ததன் மூலம், இவ்வலையமைப்பின் உறுப்பினர் எண்ணிக்கை 12 நாடுகளாக உயர்ந்துள்ளது.
- கரும்புகை என்றும் அழைக்கப்படும் கருப்பு கார்பன், புவி வெப்பமடைதலுக்குப் பங்களிக்கும் மற்றும் ஆஸ்துமா, நுரையீரல் நோய் போன்ற உடல்நலப் பிரச்சினைகளை ஏற்படுத்தும் ஒரு குறுகிய கால பருவநிலை மாசுபடுத்தியாகும்.
- வீட்டு எரிசக்திப் பயன்பாடு, காட்டுத்தீ, கழிவுகளை எரித்தல், போக்குவரத்து மற்றும் கப்பல் போக்குவரத்து ஆகியவை இதன் முக்கிய ஆதாரங்களாகும்.

- மெக்சிகோ தனது தேசிய அளவில் நிர்ணயிக்கப்பட்ட பங்களிப்பின் (NDC) கீழ் 2030 ஆம் ஆண்டிற்குள் கரும்புகை உமிழ்வை 51% குறைக்க இலக்கு நிர்ணயித்துள்ளது; பனாமா கனரக வாகனங்களை ஒரு முக்கிய ஆதாரமாக அடையாளம் கண்டுள்ளது.
- COP31 மாநாட்டில், அதிதீவிர மாசுபடுத்திகளை (Super pollutants) கட்டுப்படுத்த 480 மில்லியன் அமெரிக்க டாலர்களும், தேசியத் திட்டங்களுக்காகக் கூடுதலாக சுமார் 25 மில்லியன் அமெரிக்க டாலர்களும் அறிவிக்கப் பட்டன.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★